**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# விசுவாசம்

*விசுவாசம் அன்பு கட்டிய படிகளில் ஏறிச்செல்வதோடு நம்பிக்கை திறந்தவைத்த ஜன்னல்களுக்கூடாக வெளியே பார்க்கிறது.* - ஷார்லஸ் ஸ்பர்ஜன் (Charles Spurgeon)

## அறிமுகம்

*உண்மையான விசுவாசம்* தேவனை நோக்கி *மனந்திரும்புதலை* உள்ளடக்குவதோடு *உண்மையான மனந்திரும்புதல்* இயேசு கிறிஸ்துவை *விசுவாசிப்பதை* உள்ளடக்குகிறது! உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பலும் விசுவாசமும் கர்த்தராகிய இயேசுவை நோக்கி அமைந்துள்ளது.

நவீனகால கிறிஸ்தவ வாழ்க்கையில் விசுவாசம் என்பது அதிகமாய் விவரிக்கப்பட்டதும் அதிகமாய் கலந்துரையாடப்பட்டதுமான வேதாகம தலைப்பு மாத்திரமல்ல அதிகமாய் தவறான மேற்கோள்காட்டப்பட்டதும், தவறாக புரிந்து கொள்ளப்பட்டதுமான வேதாகமத் தலைப்பாகவும் அமைகிறது. உலகத்திலுள்ள அநேக மக்கள் இயேசு ஒரு மிகப்பெரிய நீதியான ஆசிரியர்களில் ஒருவரென புரிந்துகொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் அவரை ஒரு மதிப்பிற்குரிய மதத்தலைவர் அல்லது மதகுரு என்கிறார்கள். சிலர் தேவனுடைய தீர்க்கதரிசயென ஏற்றுக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் மிதமிஞ்சிய கடவுள்களில் இவரும் ஒருவரென அறிந்திருக்கிறார்கள். ஒரு கிறிஸ்தவனுக்கு இவைகளில் ஒன்றும் உண்மையானவையல்ல. இயேசுவானவர் கடவுளும் மனித குலத்தின் இரட்சகருமானவர். இதைவிட குறைவான அர்த்தத்தை கொடுக்கும் எதுவும் சுவிசேஷத்தை பிரதிநிதித்துவப்படுத்தலின் செல்லுபடியற்ற கருத்தாகும்.

> *“ஆகையினால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவார்கள் என்றான்.”*
> அப்போஸ்தலர் 2:36

மேலே சொல்லப்பட்ட வசனமானது தெளிவாய் சொல்லுகிறது: இயேசு எமது ஆண்டவர் - யாவே (தேவன்) இரட்சகரும் - மேசியா (கிறிஸ்து)!

> *“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும்,*

*மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.''*
அப்போஸ்தலர் 4:12

*''தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்.''*
1 தெசலோனிக்கேயர் 5:9

இயேசு மாத்திரமே எம்மைப் பாவத்திலிருந்து மீட்கமுடியும்.

*''அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்.''*
அப்போஸ்தலர் 26:18

இவ்வாறு, நீங்கள் உங்கள் பாவமன்னிப்பை பெற்றுக்கொள்வதும் தேவனோடு இணைப்பில் தொடர்ந்தும் இருப்பதும் இயேசு மூலமாகவே ஆகும். கடைசியாக நாம் படித்த பாடத்தில் பாவம் எப்படி எம்மை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது என்று பார்த்தோம். இந்த இணைப்பை திரும்பவும் பெற்றுக்கொள்வதற்கு இயேசு மூலமாக மட்டுமே முடியும். வேறு வழிகள் இல்லை. இவ்வாறு, அது மாத்திரமே தேவனிடம் செல்வதற்கான ஒரே வழியே தவிர பலவழிகளில் ஒன்றல்ல.

*''அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரன்.''*
யோவான் 14:6

விசுவாசத்தின் விவரணம்

ஆகவே, *விசுவாசம் என்றால் என்ன?*

விசுவாசம் என்பது மனிதகுலத்தின் தனித்தன்மையில் தேவனை சார்ந்திருத்தலும் அவருடைய முழுமையான ஞானத்தில், அன்பில், வல்லமையில் நம்பிக்கை வைத்தலுமாகும்.



*“ஆகையால் கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங் களுக்கடுத்த உபதேசம், கைகளை வைத்தல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக.”* எபிரேயர் 6:1-2

எமது அடிப்படை கிறிஸ்தவ வாழ்க்கையானது மனந்திரும்புதலிலும் கிறிஸ்து மீதுள்ள விசுவாசத்திலும் உருவாக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவை தேவன் என்றும் இரட்சகர் என்றும் ஏற்றுக்கொண்டு பாவங்களுக்கான மன்னிப்பை பெற்றுக் கொள்கிறோம். எமது பாவங்களுக்கான மன்னிப்பை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் ஊடாகவே பெற்றுக்கொள்ள முடியும். அது ஒரு பரிசு (எபேசியர் 2:8-9)

விசுவாசத்தைப் பற்றிய வேதாகம விவரணம்

எபிரேயர் 11:1

*“விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.”*

இதன் அர்த்தமானது லேமன்ஸ் டெர்ம்சில் (layman terms) விசுவாசம் என்பது நாம் நம்புகிறவைகளின் முக்கியமான உறுதியான தன்னம்பிக்கை. நம்பிக்கை உங்களுக்குள் வரும்போது வெளிப்படையான சரீர ஆதாரத்தை நீங்கள் காண முடியாது. யாரும் தான் காணக்கூடியதை, அனுபவமுள்ளதை அல்லது உணரக்கூடியதை எதிர்பார்க்கமாட்டார்கள். எதிர்பார்ப்பானது காரியசாத்தியமான அனுபவங்களுக்கு அப்பாற்பட்ட காரியத்தில் சார்ந்திருக்கிறது. சில காரியங்கள் தேவன் தன்னுடைய வார்த்தைகளுக்கூடாக கொடுத்த வாக்குறுதிகளில் இருக்கிறது. ஆகவே விசுவாசம் என்பது, தேவன் என்ன சொல்கிறாரோ அதை குறித்ததான உறுதியான நம்பிக்கை. என்ன சூழ்நிலை காணப்பட்டாலும் பிரச்சினையில்லை. அவர் அதைச் செய்வார். உதாரணமாக, உங்களுக்கு உங்கள் உலக தகப்பன் அல்லது மனைவி அல்லது ஒரு நண்பன் குறிப்பிட்ட பரிசை ஆறு மாத காலத்திற்குள் தருவேன் என்று பொருத்தனை செய்தால், நீங்கள் எதிர்பார்ப்போடு அந்த பொருத்தனை வரும்வரை காத்திருப்பீர்கள். உங்களுக்கு பொருத்தனை செய்யப்பட்ட பொருள் கிடைக்கும்வரை நீங்கள் எதிர்பார்ப்போடு காணப்படுவீர்கள். அது இலகுவான காலவரையறைக்கான விசுவாசம்.

ஆவிக்குரிய கால வரையறைகளில், இங்கே பேசப்படும் காரியம் என்னவென்றால் (எபிரேயர் 6:1ல் கிறிஸ்தவ அடிப்படையில் வரையறைப்படுத்திய சந்தர்ப்பம்) எமது விசுவாசத்தை கர்த்தரும்,

இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் மீது வைப்பதாகும். அப்போஸ்தலர் 20:21 – *<u>தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்</u> குறித்தும், நம்முடைய <u>கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக்</u> குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்.*

முந்தைய பாடத்தில், மனந்திரும்புதல் என்றால் எதை அர்த்தப்படுத்துகிறது என்றும் பாவத்தைக் குறித்த முழுமையான விபரத்தையும் பார்த்தோம். ஆகவே இப்போது, அடுத்த தெளிவான படியானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மீது கொண்ட விசுவாசத்தை தக்கவைத்துக்கொள்வதாகும். தேவனுடைய வல்லமையேயன்றி, வேறு எதுவும் நம்மைப் பாவத்திலிருந்து விடுதலையாக்க முடியாதென்று முந்தைய பாடத்தில் கற்றுக்கொண்டோம். இயேசுவின் சிந்தப்பட்ட இரத்தத்தினால் மாத்திரமே மன்னிப்படைகிறோம் என்பது தெளிவாகிறது. ஆகவே தேவன் உங்கள் பாவங்களுக்காக உங்களை மனந் திரும்பும்படியும், அவரிடம் திரும்பும்படியும் சொல்கிறார். அப்போது நீங்கள் இரட்சிப்படைவீர்கள். அதன்பிறகு நாங்கள் அவரை அவருடைய பொருத்தனைகளை அவர் சொன்ன காரியங்களை விசுவாசிக்கிறோம். இரட்சிப்படைந்ததற்கான வெளிப்படையான ஆதாரம் ஏதுமில்லை. இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் உங்களை இரட்சித்தாரென நீங்கள் விசுவாசித்தபோதும் சரீர ரீதியான, உணர்வு ரீதியான மாற்றங்கள் நிகழ்வதில்லை. இந்த விசுவாசம் இரட்சிப்பின் விசுவாசம் என்றழைக்கப்படுகிறது. – இந்த விசுவாசம் உங்கள் கடந்த கால பாவங்களுக்கான தண்டனையிலிருந்து இரட்சித்ததோடு, விசுவாசத்தில் தினந்தோறும் வாழ்வதற்கான ஆவிக்குரிய வாழ்க்கைக்கு முதல் படியை ஏற்படுத்துகிறது. இந்த அனுதின விசுவாசம் வாழ்வதற்கான விசுவாசமென்று அழைக்கப்படுகிறது (ரோமர் 5:10). இரட்சிப்பின் விசுவாசம் நீதிக்கு வழிநடத்துகிறது; வாழ்வதற்கான விசுவாசம் பிரதிஷ்டைக்கு வழிநடத்துகிறது. (மனந்திரும்புதல் பாடத்தில் விபரிக்கப்பட்ட கீழே உள்ள அட்டவணையை அவதானியுங்கள்.)

| தரம் | செயல் | விளைவு | விடுதலை |
|---|---|---|---|
| 1 | அடிப்படை மனந்திரும்புதல் | நியாயமானது | பாவத்தின் தண்டனை |
| 2 | தொடர்ந்துசெல்லும் மனந்திரும்புதல் | பிரதிஷ்டை செய்தல் | பாவத்தின் வல்லமை |
| 3 | அதிக சந்தோஷம் அல்லது பரவசம் | புகழ்தல் | பாவ சமூகத்திலிருந்து |

புதிய உடன்படிக்கை விசுவாசமும் பழைய உடன்படிக்கை சட்டங்களும் ஒப்பிடல்

உலகத் தோற்றமுதல், தேவன் அவருக்கும் மனிதருக்குமிடையில் விசுவாசம்-அன்பை அடிப்படையாகக்கொண்ட உறவை எதிர்பார்க்கிறார். இந்த வாழ்க்கையானது விசுவாச வாழ்க்கையென அழைக்கப்படுவதோடு

தேவனில் தங்கி வாழ்தலெனவும் அழைக்கப்படுகிறது. ஏதேன் தோட்டத்தில் இது ஜீவவிருட்சத்தை அர்த்தப்படுத்துகிறது. அதேநேரத்தில் தனிப்பட்ட ரீதியில் மனித குலத்திற்கு அவர் சுதந்திரமாய் தேவனோடு இடைப்படுவதற்கு இடமளிக்கிறார். நன்மை தீமை அறியத்தக்க ஞானத்தை கொடுக்கும் மரத்தை அவர் அனுமதித்திருந்ததை இது காண்பிக்கிறது. இந்த வாழ்க்கையானது தனிப்பட்ட சுய தெரிவுகளை செய்யக்கூடியதாய் இருப்பதோடு தேவனுடைய நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமையாய் அமைகிறது. அதாவது உங்கள் சொந்த வாழ்க்கைக்கு நீங்களே எஜமானாய் இருக்கிறீர்கள். நல்லது கெட்டது எதுவென சுயமாய் கணக்கிட்டு பார்த்தலாகும். முதல் மனிதனது தெரிவு பற்றி உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். அந்த விழுதலிலிருந்து, மனிதனை விசுவாச அன்பு உறவிற்கு மீண்டும் கொண்டுவருவதற்காக தேவன் கிரியைசெய்கிறார். ஏனோக்கு, நோவா, ஆபிரகாம் போன்ற மனிதர்கள் அப்படிப்பட்ட வாழ்க்கையை நடத்தினார்களென நாம் காண்கிறோம். எனவே தான் ஆபிரகாம் பாவத்திற்கு உடன்பட்ட போதிலும் தேவன் நீதிமானென நியாயந் தீர்க்கிறார். இயேசு கிறிஸ்து மீது விசுவாச முள்ளவர்களாய் வரும்போது, நாமும் ஆபிரகாம் செய்ததை அப்படியே செய்கிறோம். தேவன் வாக்குக்கொடுத்ததை நிறைவேற்ற வல்லவரென்பதை விசுவாசித்ததாலே தேவன் அவரை நீதிமானென்று சொன்னார். எனவே, நாமும் இயேசுவின் மீது நம்பிக்கை வைத்தவர்களாய் தேவனிடம் மனந்திரும்பி வந்து தேவன் நம்மை இரட்சிக்கிறாரென விசுவாசிப்பதால், எமது கடந்தகால பாவங்களை பொருட்படுத்தாமல் தேவன் எம்மை நீதிமானென அழைக்கிறார். எனவே தேவனோடுள்ள விசுவாச அன்பு என்னும் உறவுக்குள் திரும்பவும் கடந்துவர எம்மால் முடிகிறது.

தெரிந்தெடுக்கப்பட்ட ஜாதியான இஸ்ரவேலரிடத்தில் தேவன் நியாயப்பிரமாணத்தை அறிமுகப்படுத்தி உடன்படிக்கை செய்து கொண்டார். இந்த நியாயப்பிரமாணங்கள் பழைய உடன்படிக்கையில் கொடுக்கப்பட்டதால் ஜனங்கள் தங்களுடைய கிரியைகளினால் நீதியானவர்களாய் மாறமுடியாது தேவ கிருபையாலே முடியுமென உணர்ந்துகொண்டார்கள். அவர்கள் கொஞ்சம் அறிந்து கொண்டார்கள்! அதன் பின்பதாக 1500 வருடங்களுக்குப் பிறகு, தேவன் அவருடைய மகனை எம்முடைய பாவங்களுக்காக மரிக்கும்படி அனுப்பினார். நியாயப்பிரமாணங்கள் கொடுக்கப்பட்டதால் ஜனங்கள் தங்களை தாங்கள் இரட்சித்துக்கொள்ள முடியாது. தங்களை இரட்சித்துக் கொள்ள ஒரு இரட்சகர் தேவையென உணர்ந்து கொண்டார்கள். இயேசு கிறிஸ்துவிடம் எம்மை கொண்டுவருவதற்காகவும் நியாயப்பிரமாணங்கள் கொடுக்கப் பட்டது.

> *இவ்விதமாக, நாம் விசுவாசத்தினலே நீதிமான்க ளாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது.*
>
> கலாத்தியர் 3:24

நீங்கள் கிருபையினால் விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்.

*கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு.* எபேசியர் 2:8

பிரதானமாக, அது ஒரு ஈவு. யாராவது ஒருவர் உங்களுக்கு பரிசு கொடுத்தால், நீங்கள் அதை ஏற்றுக்கொள்வது அவசியம். உவமானமாக, தேவன் பரலோகில் இருந்து மனிதனை நோக்கி கரங்களை விரிப்பாரானால் விசுவாசத்தோடு அவருடைய கரங்களை அடைதல் எமது பொறுப்பாகும். இவ்வாறு, விசுவாசமானது எமது கரங்களை நீட்டி தேவனைச் சேர்ந்து அவருடைய மகத்துவமான உதவியையும் ஆசீர்வாதத்தையும் எமது வாழ்க்கைக்கு பெற்றுக்கொள்வதாகும்.

*அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருங்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து,*
1 கொரிந்தியர் 15:1-4

உங்களுடைய பாவங்களுக்காக தேவன் தன்னுடைய மகன் இயேசுவை அனுப்பினாரென நீங்கள் முதலில் விசுவாசிக்க வேண்டும். அவர் உங்கள் பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேதாகமத்தின்படி, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இன்று அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். நீங்கள் இதை விசுவாசித்தால், அதன்பின்பு நீங்கள் உங்கள் கைகளை அவருடைய உன்னதமான உதவியை பெற்றுக்கொள்ளும்படி தேவனை நோக்கி விசுவாசத்தோடு உயர்த்துவீர்கள். தேவன் என் மீதும் உங்கள் மீதும் கொண்ட அன்பினால் தன்னுடைய குமாரனை கொடுத்தார்! ஆகவே, கர்த்தராகிய இயேசுவின் மீது விசுவாசம் வைத்திருப்பதற்கு தூண்டும் ஒரே காரியம் தேவனுடைய அன்பு தான்.

*நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.* ரோமர் 5:7-8

ஆம், ஒருவரும் உங்களுக்காக மரிக்கமாட்டார்கள். ஆனால் ஒருவர், *உங்கள் மீதுள்ள அளவில்லா அன்பினால்* தன்னுடைய ஒரே குமாரனை முன்னமே பலியாக்கினார்.

இங்கே நீங்கள் யாராயிருந்தாலும், என்ன செய்திருந்தாலும் தேவன் உங்களுக்காக என்ன செய்தார் என்பதன் சுருக்க விபரம்:

- ரோமர் 5:6 → நாம் பெலனற்றவர்களாய் இருந்த போதும் தேவன் நமக்காக மரித்தார்.
- ரோமர் 5:8 → நாம் பாவிகளாயிருக்கையில், கிறிஸ்து நமக்காக மரித்தார்.
- ரோமர் 5:10 → நாம் தேவனுடைய விரோதிகளாயிருக்கையில், கிறிஸ்து நமக்காக மரித்தார்.

ஆகவே நீங்கள் பெலனற்றவர்களாயிருந்தாலும், பாவியாயிருந்தாலும், தேவனுடைய விரோதியாயிருந்தாலும், இதுவரை கிறிஸ்து உங்களுக்காக மரித்தார்.

> *தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ள வர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக் குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே....* எபேசியர் 1:4

மேலே சொல்லப்பட்ட வசனமானது, WCF ஆலயத்துக்கு இந்த வருடத்தின் வாக்குத்தத்த வசனமாகும். தேவன் இந்த பூமியை அதிலுள்ள யாவையும் படைப்பதற்கு முன்னே தேவன் உங்களை நேசித்தார் என்பதை உங்களால் காணமுடிகிறதா? எங்களில் எத்தனைபேர் இவ்விதமான அன்பை புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறித்து நான் வியப்படைகிறேன். இந்த பூமி படைக்கப்படுவதற்கு முன்னே தேவன் என்னை அறிந்திருக்கிறார் என்பதை என்னால் காணமுடிகிறது. ஆகவே, என்னுடைய பாவங்களினிமித்தம் தேவன் என்னோடு ஐக்கியப்பட முடியாதிருப்பதால், இயேசு கிறிஸ்து பலியானதின் ஊடாக அவரிடம் செல்ல வாய்ப்பளித்திருக்கிறார். இப்படியாக, தேவனுடன் விசுவாச-அன்பு உறவு ஆரம்பிக்கிறது. மேலே கூறப்பட்ட வசனமானது தேவன் தானாகவே தெரிவு செய்திருக்கிறாரென நினைக்கத் தூண்டுகிறது. இல்லை, உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் உங்களை தெரிந்தெடுத்தது ஒரு நாள் நீங்கள் இரட்சிப்பின் செய்திக்கு மாறுத்தரவு கொடுக்கும்படியாகத்தான். (ரோமர் 8:29) அது இரட்சிப்பு என்பது தேவனுக்கு பெறுமதியான தெரிவாகவும், உங்களுக்கு வெற்றிகரமான தீர்மானமாகவும் இருக்கிறது.

பழைய புதிய உடன்படிக்கையில் காணப்படும் விசுவாசம் யாத்திரயாகமம் 12 அதிகாரத்தில், கடந்து செல்லுதலைப் பற்றி வாசிக்கிறோம். தேவன் இஸ்ரவேலரிடம் செம்மறி ஆட்டுக்குட்டியின்

இரத்தத்தை கதவு நிலைகளில் பூசும்படியும் அப்பொழுது மரணத்தின் தேவதூதன் உங்கள் இருப்பிடங்களை தாண்டிச் செல்லுவானெனச் சொன்னார். அதைப் பற்றி கொஞ்சம் சிந்தியுங்கள். அந்த வீட்டிற்குள் வாழ்வது யாரென தேவனுக்குத் தெரியாதா? அந்த தூதன் ஒவ்வொரு வீட்டையும் சோதிக்க வேண்டுமா? அவர்களுடைய நல்ல கிரியையினால் அல்லது பரிசுத்த வாழ்க்கையினால் காப்பற்றபடக்கூடுமா? நான் அப்படி நினைக்கவில்லை. அது என்னவென்றால், உங்கள் நம்பிக்கையை கர்த்தர் மேல் வைக்கும்படியும், அதன் அடிப்படையில் தேவன் கிரியை செய்வதையும் அர்த்தப்படுத்தும். யாரொருவர் தன் நம்பிக்கையை தேவன் மீது வைத்து செம்மறியாட்டுக்குட்டியின் இரத்தத்தை கதவு நிலைகளில் ஈசோப்புடன் பூசுகிறார்களோ அவர்கள் காப்பாற்றப்படுவார்கள்.

எனவே, யாத்திரயாகமம் 12 அதிகாரத்தில் யூதருடைய நாட்காட்டியில் முதல் மாதம் 14ம் திகதி இது நடைபெற்றது. இது அவர்களுக்கு இரட்சிப்பைக் கொண்டுவந்தது. புதிய ஏற்பாட்டு விசுவாசிகளான எங்களுக்கு எமது பாவங்கள் கழுவப்பட்டவர்களாய், விசுவாசத்தில் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கபட்டவர்களாய் இருக்கவேண்டும். அந்த நாட்காட்டியில் 1500 வருடங்களுக்கு முன் அந்த முதல் மாதத்தில் 14ம் திகதி இயேசு சிலுவையில் அறையப்பட்டார். இவ்வாறு இயேசு செய்து முடித்த காரியத்தில் நீங்கள் விசுவாசம் வைப்பீர்களானால் நீங்கள் இரட்சிக்கபட்டுவிட்டீர்கள். கடந்தகாலத்தில் எப்படிப்பட்ட வாழ்க்கை நீங்கள் வாழ்ந்திருந்தாலும் அது பிரச்சினையல்ல. -நல்லதோ,கெட்டதோ- உங்கள் இரட்சிப்பிற்கு அது உதவிசெய்ய முடியாது. கர்த்தராகிய இயேசு கிறஸ்துவின் மீது கொண்டுள்ள விசுவாசத்தினால் கிருபையின் மூலம் மாத்திரமே நீங்கள் இரட்சிக்கப்படுகிறீர்கள்.

பழைய மற்றும் புதிய காரியங்களுக்கிடையிலான சமாந்தரக் கோட்டை நான் வரைய விரும்புகிறேன். அவர்கள் சிவந்த சமுத்திரத்திற்கு அருகே அதை கடப்பதற்காக வந்தார்கள், தேவனை விசுவாசிப்பதைத் தவிர வேறொன்றும் செய்யமுடியாத நிலைக்கு வந்தார்கள். அதனால், உலர்ந்த தரையிலே வெற்றி நடையோடு கடந்தார்கள். – 1 கொரிந்தியர் 10ல் சொல்லப்பட்டபடி – புதிய உடன்படிக்கையின் விசுவாசிகளுக்கு இது முழுக்கு ஞானஸ்நானம். ஆனால் அவர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு சமீபிக்கையில், ‘‘நான் மோசேயோடு இருந்தது போல உன்னோடும் இருப்பேன்’’ என்று தேவன் யோசுவாவிற்கு பொருத்தனை செய்தார், மேலும் ‘‘உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்கு கொடுத்தேன்’’ எனவும் வாக்குக் கொடுத்தார். (யோசுவா 1:1-5). புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாங்களும் பாவம் எங்களை மேற்கொள்ள முடியாதென்ற வாக்குறுதியைப் பெற்றிருக்கிறோம். (ரோமர் 6:14) ஆனால் இங்கே திரும்பவும் எமது வாழ்க்கையின் ஒவ்வொரு யுத்தத்திலும் நாம் விசுவாசத்தைக் கொண்டு மாத்திரம் போராட வேண்டியவர்களாயிருக்கிறோம். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றவர்களாய், பரிசுத்த ஆவியானவர் எமக்குள் வாசம்செய்யும்போது, நல்ல வாக்குறுதியைப் பெற்றவர்களாயிருக்கிறோம். எகிப்திலிருந்து

வெளியேறியவர்களாய் செங்கடலைக் கடக்கும் அந்த காட்சியானது இப்போது இரட்சிப்பின் விசுவாசமாகவும், கொடிய காரியத்திலிருந்து வெளியேறியவர்களாய், கானானுக்கு பிரவேசிப்பது முன்னர் குறிப்பிட்டதுபோல வாழ்வதற்கான விசுவாசமாகவும் இருக்கிறது.

இஸ்ரவேலில் 600,000 பேரில், 2 பேர் மாத்திரமே விசுவாசத்திற்கூடாக வாக்களிக்கப்பட்ட தேசத்தில் கால் பதித்தார்கள். இன்றைய நாளின் உலகத்திற்கு இதேபோன்று தானென தனிப்பட்ட ரீதியில் நான் உணர்கிறேன். மிகவும் கொஞ்சம் பேர்தான் தேவன் சொல்லியிருக்கும் காரியங்களை விசுவாசத்தினால் மேற்கொள்கிறார்கள்.

இயேசு அவரை நோக்கிப் பார்ப்பது தான் இரட்சிப்பின் விசுவாசமெனச் சொல்கிறார்.

> *சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே*
> *உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை*
> *விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல்*
> *நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்.*
>
> யோவான் 3:14-15

ஜனங்கள் தேவனுக்கும், மோசேக்கும் விரோதமாக ஓர் பர்வதத்தில் கலகம் பண்ணியபோது, தேவன் கொடூரமான பாம்புகளை அனுப்பினார். அது ஜனங்களைக் கடித்ததால் அநேகர் அவ்விடத்திலே மரித்துபோனார்கள். ஆனால் மோசே அந்த ஜனங்களுக்காக ஜெபம் பண்ணியபோது, வெண்கல பாம்பு உருவத்தை ஒரு கம்பத்திலே கட்டி அதை உயர்த்தும்படி தேவன் மோசேக்கு கட்டளைகொடுக்கிறார். அந்தக் கம்பத்திலே கட்டப்பட்ட வெண்கல சர்ப்ப உருவத்தை யார் யாரெல்லாம் பார்க்கிறார்களோ அவர்கள் சுகமடைந்தார்கள். எமது இயற்கையான மாறுத்தரவு மருத்துவ உதவியை நாடுவதுதான். ஆனால் தேவன் அதைப் பார்க்கும்படி மாத்திரமே சொல்கிறார். அதைப்போலவே, பாவிகள் நித்திய வாழ்வைப் பெறுவதற்காக இயேசுவைப் பார்க்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள். இதைக்குறித்து யோவான் 3:16ல் இப்படியாகச் சொல்லப்படுகிறது, *தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.*

விசுவாசம் என்பது ஒரு தெரிவு

ஆம், தேவனுக்கு பெறுமதிமிக்க விருப்பமும் மனிதனுக்கு சுதந்திரமான விருப்பமும் இருக்கிறது. இந்த இரண்டிற்கும் இடையில் சமநிலையை பேணுவதற்கு நாம் மறந்துவிடக்கூடாது. அது நீங்கள் செய்யவேண்டிய தெரிவாயிருக்கிறது.



இது மணப்பெண் செய்கிறதான ஒரு ஒப்பந்தத்தைப் போன்றது. அவள் தன் வாழ்க்கையில் இணைந்துள்ள அனைத்தையும் பின்னாலே வைப்பதற்கு தெரிவு செய்கிறாள். தன் கணவனைப் பின்பற்றி அவளுடைய பெயரை மாற்றி, வீட்டை மாற்றி, இறந்த காலத்தில் தான் வைத்திருந்த அனைத்தையும் விட்டு, புதிய பெயருடன், புதிய வீட்டில், புதிய தீர்மானங்கள் போன்ற காரியங்களை தெரிவு செய்கிறாள். வேதாகமம் எம்மை கிறிஸ்துவின் மணவாட்டி என்கிறது. சில ஆண்கள் அவர்கள் ஆண்களாயிருப்பதால் தாங்கள் மணவாட்டியென்பதை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள். ஆனால் நாம் அவரோடு ஒப்பந்தம் பண்ணியிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இயேசு மீண்டும் அவரோடு மணவாட்டியாகிய எம்மை அழைத்துச் செல்கிறார்.

> *நான் உங்களை கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக் கிறேன். 2 கொரிந்தியர் 11:2*

மேலே சொல்லப்பட்ட வசனமானது வலியுறுத்துவது கொரிந்து சபையிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதிய அப்போஸ்தலர் பவுல் எம்மை கிறிஸ்துவோடு திருமண ஒப்பந்தம் செய்து, எம்மைத் தூய்மையான கன்னித்தன்மையோடு வரப்போகிற ராஜாவுக்கு சமர்ப்பிக்கிறார். உங்களுக்குத் தெரிந்த யாராவது ஒருவர் ஒருவரை திருமணம் முடிப்பதற்கு நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறாரென நினைத்துக்கொள்ளுங்கள். உதாரணமாகச் சொல்வோமானால், அவர் யுத்தப்படையிலே சில வருடங்கள் பணிபுரிய போகிறார். அதேநேரத்தில், அந்த மணப்பெண் மற்றைய ஆண்களோடு எல்லா இடங்களுக்கும் செல்கிறவளாய், மற்றைய ஆண்களோடு நித்திரை செய்கிறவளாய் இருந்தால், நீங்கள் அவளை எப்படி அழைப்பீர்கள்? அவள் அந்த நிச்சயதார்த்தத்திற்கு விசுவாசமில்லாதவளாக இருக்கிறாள் அல்லவா? கிறிஸ்தவத்திலும் இப்படியாகத்தான் நடக்கிறது. ஜனங்கள் தங்களை கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொண்டு தேவனிடம் விசுவாசம் வைத்து, கிறிஸ்து திரும்பி வரவேமாட்டார் என்பதுபோல கறைப்பட்டவர்களாய் உலக வழக்கத்தைப்போல வாழ்கிறார்கள். இது ஆவிக்குரிய விபச்சாரம் ஆகும்.

ஏன் ஒவ்வொரு மணமகளும் அவளுடைய கணவனிடம் தன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்? முதலாவது,

அன்பினிமித்தம்; இரண்டாவது அவர் தன்னை விட்டுப் போகமாட்டார் என்றும் தன்னை கவனிப்பாரென்றும் தங்கள் இருவருடைய வாழ்க்கைக்கும் போதுமான நல்லதைக் கொடுப்பாரென்ற விசுவாசம் தான். ஆகவே, நாம் தேவனிடம் வரும்போது, அவர் நம்மை எவ்வளவு நேசிக்கிறாரென்று அறிந்திருப்பதோடு எமது வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுத்து பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து மணவாளனுக்காக காத்திருக்கவேண்டும்.

விசுவாசத்திற்கு எதிராக இன்றைய நவீன கால பிரச்சினைகள் என்ன? கிறிஸ்தவ விசுவாசத்திற்கு முழுமையான அமைப்புமுறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. நாம் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு எமது அவதானத்தைச் செலுத்தும்போது பிரச்சினைகள் வருகிறது. இறுதியாக அர்ப்பணிப்பு இந்த மூன்றையும் உள்ளடக்காவிட்டால் உணர்வற்றதாகிவிடும்.

### *a) இயேசு என்னுடைய பாவங்களை மன்னிப்பவர்*

நாங்கள் அனைவரும் இயேசு எமது பாவங்களுக்காக இப்பூமிக்கு வந்து மரித்தாரென விசுவாசிக்கிறோம். எனவே நாம் எமது பாவத்திற்கான தண்டனையிலிருந்து விடுதலையாகி மன்னிக்கப்பட்டிருக்கிறோம். ஆம் அது 100% உண்மையானது. ஆனால் அது முழுமையான சுவிசேஷம் அல்ல. நாம் வளர்ந்தபோதிலும் பலவித சிற்பங்கள், ஓவியங்களில் காட்டப்பட்டவிதமாய் எப்பொழுதும் இயேசுவை சிலுவையில் அறையப் பட்ட காட்சியையே சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். மேலதிகமாக ஒவ்வொரு வருடமும் பாஸ்கு காலத்தில் தொடர்கிறவர்களாய் பெரிய வெள்ளி தினத்தை அநுசரிக்கிறோம். எப்படியாயினும், இயேசு எமது பாவங்களுக்காக மரித்தது மட்டுமல்ல *அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார்* என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

### *b) இயேசு பாவத்திலிருந்து என்னை விடுதலையாக்குகிறார்.*

> *ஆவாள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக: ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.*
> மத்தேயு 1:21

இயேசு வெறுமனே எமது பாவங்களுக்கா மட்டும் மரிக்கவில்லை. ஆனால் அவர் பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கிறார். எமது முந்தைய பாடத்திலே, எப்படி எமது இருதயம் தந்திரமுள்ளதாயும், ஏமாற்றுகிறதாயும் இருக்கிறதென்றும் நாம் அந்த அசுத்தமான பாவங்களிலிருந்து இரட்சிப்படைய வேண்டுமென்றும் பார்த்தோம்.

- பாவத்தை வெறுத்தல்

- மனம் வருந்துதல்
- மனந்திரும்பல்
- கைவிடப்பட்ட பாவம்
- நீதியை விரும்புதல்

**c)** இயேசு நீதி என்னும் ஆடையை அணிவிக்கிறார்.

எங்களில் அநேகர் எம்முடைய வாழ்க்கையில் தேவன் நம்மை நீதி என்னும் வஸ்திரத்தினால் உடுத்திவிக்கிறார் என்பதை உணராமல் இருக்கிறார். இயேசுவின் இரத்தம் எமது பழைய பாவங்கள் அனைத்தையும் துடைத்துவிட்டது. இந்த நிகழ்கால கட்டத்தில் தேவனை அணுகி பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதால் தேவன் நீதியின் வஸ்திரத்தை அணிவிக்கிறார். தேவன் பரிசுத்த ஆவியானவரை எமது உள்ளத்திற்குள் அனுப்பியதால் தேவனுக்கேற்ற வாழ்க்கை வாழமுடிகிறது. கிறிஸ்து இயேசுவுக்குள்ளிருந்த அதே வல்லமை எமது வாழ்விலும் வளர்ச்சியடைகிறது.

*இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது. அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத் தினாலே பலிக்கும் தேவநீதியே: விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை. எல்லோரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவரு டைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொணடு நீதிமான்களாக்கப் படுகிறார்கள். தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.* ரோமர் 3:21-26

*நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவ மாக்கினார்.*
2 கொரிந்தியர் 5:21

இதை உள்ளத்தில் வைத்திருங்கள், இயேசு எமது பழைய பாவங்களுக்காக கிரயத்தை செலுத்தி, நீதியென்னும் ஆடையை அணிவிக்கிறார். அதனால் தேவனுக்காக நீதியாக வாழ எம்மால் முடியும்.

சரியான நம்பிக்கை உங்கள் வாழ்க்கையில் சரியான பழங்களை கொடுக்கும். நீங்கள் தேவனுடைய நீதியினால் அணிவிக்கப்பட்டு இருக்கிறீர்கள். அந்த ஸ்தானத்தில் நீங்கள் உங்கள் அன்றாட வாழ்க்கையில் நீதியின் கனிகளை கொடுப்பீர்கள்.

> *அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார்.* மத்தேயு 9:29

விசுவாசம் எப்படி வருகிறது? விசுவாசம் கேட்பதாலும் தேவனுடைய வார்த்தையை கேட்பதாலும் வருகிறது. அநேகர் இதை அறிந்திருந் தாலும் மிக அரிதான சிலரே இதன் உண்மையான அர்த்தத்தை அறிந்திருக் கிறார்கள். நீங்கள் எதைக் கேட்கிறீர்களோ அதனடிப்படையிலே உங்கள் விசுவாசம் வருகிறது.



உங்களைப் பற்றிய கெட்ட காரியங்களை கேட்பீர்களானால் உங்கள் விசுவாசமும் தேவனிடமல்ல கெட்ட காரியங்களிலேயே இருக்கும். நான் ஒரு சிறிய உதாரணத்தை சொல்கிறேன். உங்கள் வீட்டில் ஒரு மின்விளக்கு சுவிட்சை நீங்கள் அழுத்தினால், அது உடனடியாக எரியுமென உங்களுக்குத் தெரியும். அது உங்கள் விசுவாசத்தின் கால அளவிலான வளர்ச்சியாகும். இந்த நிகழ்வில் உங்களுக்கு இதற்கு முன் அனுபவமில்லாமல் இருந்தால், அல்லது ஒழுங்கான மின்சார விநியோகம் இல்லாத இடத்தில் நீங்களிருந்தால், அதைப்போல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நீங்களிருந்தால் நீங்கள் சுவிட்சை போட்டவுடன் மின்விளக்கு எரியுமென்று உங்களால் உறுதியாய் எண்ணமுடியாது.

> *ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனடைய வசனத்தினாலே வரும்.* ரோமர் 10:17

மேலே சொல்லப்பட்ட வசனத்தை நிதானமாக திரும்பவும் ஒருமுறை வாசித்து, அதன் தொடர்பை பாருங்கள். இவ்வாறு நீங்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டால், உங்களால் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள முடியும்.

> *“அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் ” என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல்*

*அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லோருக்கும் தகப்பனானான்.* ரோமர் 4:17

மேலே சொல்லப்பட்ட வசனமானது, தேவனில்லாதவைகளை அழைத்தது எல்லாவற்றையும் படைத்த படைப்பாளி அவராய் இருப்பதாலேயே என்பதை நாம் தெளிவாய் பார்க்கலாம்.

*தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார். வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாக பிரித்தார்.* ஆதியாகமம் 1:3-4

*இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். 2 கொரிந்தியர் 4:6*

இவ்வாறு, இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக தேவனைப் புகழ்வதற்கான அறிவு எங்களிடத்தில் உள்ளது.

விசுவாசத்தின் அளவுகோல்

மக்கள் எப்போதும் சொல்வார்கள் உங்களைப்போல விசுவாசம் எனக்கும் இருந்தால், நான் இன்னும் அநேக காரியங்களைச் செய்வோம். – தேவன் எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அளவுகோலை கொடுத்திருக்கிறார். ரோமர் 12:3 நீங்கள் விசுவாசத்தில் வளரவேண்டும். அத்தோடு தேவனோடு உங்களுக்குள்ள உறவையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

இயேசு சொல்கிறார்,

*அதற்கு இயேசு உங்கள் அவிசுவாசத்தினாலேதான்:*
*கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால்*
*நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு*
*அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்.*
*உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று,*
*மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*
மத்தேயு 17:20



உங்களுக்குத் தேவையானதெல்லாம் கடுகு விதையளவு விசுவாசம் தான். மிகச்சிறிய காரியம். ஆனால் அந்த மரம் நாட்டப்பட்டால்... . ஆனால் இந்த விதை விதைக்கும்போது, அதன் வேர் ஆழமாய்ச் செல்கிறது. பெரிய மரமாய் வளர்ந்து கனிகளைத் தாங்குகிறது. இப்பொழுது கடுகு விதையைப் பார்ப்போம். மிகவும் சிறியதாயிருந்தாலும் அதற்குள் ஆச்சரியமான காரியத்தை உள்ளே கொண்டிருக்கிறது. நாங்களும் கிறிஸ்தவர்களாக, விசுவாசமென்னும் சிறிய விதையில் பரிசுத்த ஆவியானவரென்னும் தண்ணீரை ஊற்றி அதற்கு போஷணை கொடுங்கள்.

> *"இயேசு அவனை நோக்கி, நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்."*
>
> மாற்கு 9:23

விசுவாசத்தினால் நடக்கக்கூடாத காரியத்தையும் வாய்க்கச் செய்வார்.

விசுவாசமென்னும் உபகரணம்

விசுவாசமென்பது உங்களை தங்கியிருக்கும் காரியமல்ல. இந்த கருத்தானது உங்களுக்கு அலட்சியமானதாய் இருக்கலாம். ஆனால் அது உண்மை. நீங்கள் ஏதேனும் விமானத்தில் அல்லது ஏதேனும் ஒரு போக்குவரத்தில் பயணம் செய்தால், அது அதன் இடத்தை அடையுமென விசுவாசிக்கிறீர்கள். ஆனால் உங்கள் விசுவாசம் எதிலிருக்கிறது? அது உங்களோடு தொடர்புடையதாக உங்களது இயலுமான தன்மை, வல்லமை என்பவற்றில் தங்கியிருக்கிறதா? இல்லை! அது முழுமையாக விமானம் சரியான நிலைமையில் இருக்கிறதா, அது உங்களையும் உங்கள் பைகளையும் இன்னும் 300 பேரையும் சுமந்து, ஏறக்குறைய 10000 அடி உயரத்தில் செல்வதற்கு வல்லமை பெற்றிருக்கிறதா, விமானி போதுமானளவு விமானம் செலுத்துவதில் அனுபவமுள்ளவராய் இருக்கிறாரா? இவைகளில் எதிலும் உங்கள் பங்களிப்பு இல்லை. ஆனால் உங்கள் ஆசனத்தில் மனஉறுதியோடு (விசுவாசப் பயிற்சி) அமர்ந்திருப்பதால் நீங்கள் சேரவேண்டிய இடத்தை அடையலாம். ஆனால் பயணத்தின்போது, இந்த விமானம் நம்மை தாங்கக்கூடாதென நினைத்து விமான பயண சட்டத்தை மீறிக் கதவைத்திறந்து வெளியே பாய்ந்தால் புவியின் ஈர்ப்புச்சக்திப்படி படுபாதாளம் போன்ற ஆழத்தில் விழுந்துவிடுவீர்கள். ஆகவே உங்கள் விசுவாசம் விமானத்தின் மீதும் விமானியின் மீதும் சார்ந்திருக்கவேண்டும். இங்கே, விசுவாச மையம் நீங்களல்ல அது விமானம்.

மின்விளக்கு உதாரணத்தின்படி அந்த மின்விளக்கு மின்சாரத்தைக் கொண்டு இயங்குமென்றும் அதற்காக நீங்கள் ஒன்றும் செய்யத்தேவையில்லை. இங்கே சுவிட்சை நீங்கள் அழுத்துவது விசுவாசப் பயிற்சியாகும். நீங்கள் ஒரு கதிரையில் அமரும்போதும் நீங்கள் அமர்ந்துகொள்வதால் உங்கள் விசுவாசத்திற்கு பயிற்சி கொடுக்கிறீர்கள். அந்தக் கதிரையானது உங்கள் பாரத்தை தாங்கக்கூடியதென்றும் அது நல்ல நிலையில் இருக்கிறதென்றும் உங்கள் முழுமையான விசுவாசத்தை

அதன்மீது வைக்கிறீர்கள். அந்த விசுவாசம் இல்லாவிடில் நீங்கள் அதன் கால்களை பார்த்து அது உங்கள் பாரத்தை தாங்குமா என்று பார்த்துத்தான் அமர்ந்துகொள்வீர்கள். நீங்கள் அந்தக் கதிரையை பரிசீலிக்காமல் அமர்ந்து கொள்வீர்களானால் நீங்கள் உங்கள் விசுவாசத்தை அந்தக் கதிரையின் மீது வைக்கிறீர்கள். ஆனால் அந்தக் கதிரையின் நிலை குறித்து நீங்கள் பரிசோதிப்பீர்களாயின் அதில் அமர்வதற்கு உங்களுக்கு விசுவாசமில்லை. விசுவாசம் என்பதன் சாராம்சமானது ஆதாரம் காணமுடியாதிருக்கும்போது நம்பிக்கையாயிருப்பதாகும். இங்கே விசுவாசப் பொருள் நீங்களல்ல: அது கதிரை ஆகும்.

ஆகவே, நாம் விசுவாசத்தைக் குறித்து பேசும்போது எமது விசுவாச மையம் தேவன் என்பதையும், அவருடைய மகனாகிய இயேசு என்பதையும் நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். தேவனையும் தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவையும் நோக்கி மேலே பரலோகத்தை பாருங்கள். அவர்கள்தான் உங்கள் நம்பிக்கையின் மையம். எனவேதான் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதால்தான் விசுவாசம் வருகிறதென்று சொல்லப்படுகிறது. தேவன் என்ன சொல்கிறார் என்று நீங்கள் கேட்டால், தேவன் அவருடைய வார்த்தையில் என்ன சொல்கிறாரோ அதைச் செய்வாரென நம்பும்போது உங்கள் விசுவாசம் வளர்ச்சியடைகிறது. நீங்கள் அவருடைய வல்லமையை, கிருபையை, அன்பை எதை நம்புகிறீர்களோ அதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை. இது உங்களை ஆச்சரியப்படுத்துமென நம்புகிறேன்.

விசுவாசம் தனிமையானதல்ல!



விசுவாசம், அன்பு, எதிர்பார்ப்பு என்பன கிறிஸ்தவத்தின் மூன்று தூண்களாகும்! கீழே கொடுக்கப்பட்ட வசனத்தின்படி எமது வாழ்வில் இவை மூன்றையும் சரியான அளவுகளைக் கொண்ட மட்டத்தில் சரியான பரிமாணத்தில் வைத்திருக்கவேண்டும்.

*இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது.*
1கொரிந்தியர் 13:13

*தேவனுக்குப் பிரியமான சகோதரரே, உங்கள் விசுவாசத்தின் கிரியையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து,*
1 தெசலோனிக்கேயர் 1:2

*பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களா யிருந்து, விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசத் தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச் சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம். 1 தெசலோனிக்கேயர் 5:8*

நம்பிக்கையென்பது ‘‘உறுதியான எதிர்பார்ப்போடு சேர்ந்த விருப்பம்’’ என (American Heritage Dictionary) அமெரிக்க எரிடேஜ் டிக்ஷனரி சொல்கிறது. விசுவாச நடையில் தேவனை நோக்கிய எதிர்பார்ப்பின் முதற்படி நம்பிக்கையாகும். ஒருமுறை எமக்குள் நம்பிக்கை வந்துவிட்டால், விசுவாசம் அதன்மேல் கட்டப்படுவது எமது வாழ்வில் தெளிவாகும். (air conditioner) வாயு குளிராக்கி செயற்படுவதற்கு மின்னோட்டம் கட்டுப்படுத்துவதை போல நம்பிக்கை விசுவாசத்திற்கு வழிகோலுகிறது. வாயு குளிராக்கிக்கு செயற்படுவதற்கான வல்லமையை கொடுப்பது மின்னோட்டமாகும். நம்பிக்கையும் அதுபோல் விசுவாசம் செயற்படுவதற்கு வல்லமையை கொடுக்கிறது. விசுவாசத்தின் பலனானது நியாயத்தில் நாங்கள் சந்தோஷப்படவும், பிரச்சினைகள் மத்தியில் சந்தோஷமாயிருப்பதற்கும் நித்திய வாழ்க்கையில் பரலோகில் தேவனோடு இருப்பதைக் குறித்தும் சந்தோஷப்படவும் செய்கிறது. நாங்கள் அவர் மேல் வைத்த விசுவாசத்தினால் தேவன் நம்மேல் அன்பாயிருக்கிறாரே தவிர அவரிடத்தில் நடிப்பதால் அல்ல. 1 கொரிந்தியர் 13 அதிகாரத்தில் பவுல் தெளிவாகச் சொல்கிறார் வரங்கள் தற்காலிகமானது ஆனால் அன்பும் விசுவாசமும் நம்பிக்கையும் நித்தியமானவை. ஆகவே ஒருபோதும் முடிவுறாத, என்றும் கைவிடாத தேவனுடையதைப் போன்ற அன்பைக் கொண்டிருக்கவேண்டும். தேவனுடைய அன்பைப் போன்ற அன்பில் நடந்து நித்தியத்தை அடையவேண்டும்.

சுருக்கமாக,

- விசுவாசத்திற்கான முதல்படி *நம்பிக்கை* ஆகும்.
- *விசுவாசம்* தேவனை நம்புவதற்கு வல்லமையை கொடுக்கிறது
- *அன்பு* எம்முடைய கிரியைகளின் சாராம்சம் ஆகும்.

விசுவாசத்திற்கான ஆதாரம்
நல்ல கனிகள் உண்மையான விசுவாசத்தோடு சேர்ந்திருக்கவேண்டும். இல்லாவிடில், அது தேவனுடைய வார்த்தையின்படி கிரியையில்லாத விசுவாசமாகிவிடும்

*என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?* யாக்கோபு 2:14

*அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.*
யாக்கோபு 2:26

வாசியுங்கள் யாக்கோபு 2:14-16

உங்கள் வாழ்க்கையில் கனிகள் இல்லாமல் உங்கள் விசுவாசத்தைக் காட்ட முடியாதென இப்போது புரிந்து கொண்டிருப்பீர்கள்.

*நாங்களோ நீதிகிடைக்குமென்று ஆவியைக் கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம். கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது. அன்பினால் கிரியை செய் கிற விசுவாசமே உதவும்.*
கலாத்தியர் 5:5-6

விசுவாசம் அன்பினூடாக கிரியை செய்வதே உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு சாட்சியாகும். உங்கள் நல்ல கிரியைகளும், நல்ல கனிகளும் மாத்திரமே உங்களிடம் விசுவாசம் உண்டென்று நிரூபிக்கிறது. தேவனுடைய ஆவியானவர் இந்த நல்ல கனிகள் நமக்குள் உருவாக உதவுகிறார்.

*ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். இப்படிப் பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்று மில்லை.* கலாத்தியர் 5:22-23

பிரிட்டிஷ் விமானநிலையத்தில் டிக்கெட் ஒன்றை வாங்கி, எந்தவித பயமும் திகிலுமில்லாமல் அமர்ந்து பயணம் செய்வதே நீங்கள் விசுவாசமாயிருக்கிறீர்களென்று அர்த்தப்படுத்துகிறது. சந்தேகமில்லாமல் கதிரையில் உட்காருவதன் மூலமாகவே நீங்கள் விசுவாசத்தைக் கொண்டிருக்கிறீர்களென்று காண்பிக்கிறது. அதேபோல் எரியச்செய்வதற்காக மின்விளக்கின் சுவிட்சை நீங்கள் அழுத்துவதாலேயே நீங்கள் விசுவாசிக்கிறீர்களென்று நிரூபிக்க முடியும். விமானங்கள் மோதிக்கொள்ளலாம் அல்லது கதிரைகள் உடையக்கூடும் அல்லது

மின்விளக்குகள் எரியாமல் இருக்கலாமென அறிந்திருந்தும் நாம் இலகுவில் எமது விசுவாசத்தை இவைகளில் வைக்கிறோம். மிக இலகுவமாக இவைகளில் விசுவாசத்தை வைக்கும் நாம் ஒருபோதும் கைவிடாத ஒருபோதும் விட்டுவிலகிடாத தேவனிடத்தில் ஏன் விசுவாசம் வைக்க முடியாது? மேலே சொல்லப்பட்ட வசனங்கள் குறிப்பிடுவதன்படி, வேதாகம கட்டளைகளுக்கு மாறுத்தரவாக நீங்கள் உண்மையான நம்பிக்கை கொண்டுள்ளீர்களென்பதை உங்கள் கிரியைகள் வெளிப்படுத்தும்.

விசுவாசத்தில் தேவன் பிரியப்படுகிறார்

> *விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.*
>
> எபிரேயர் 11:6

தேவனை பிரியப்படுத்தும் ஒரே வழி விசுவாசம் தான். சிறிய அளவிலான விசுவாசம்கூட போதுமானது. கடுகு விதையளவு விசுவாசம் மலைகளைப் பெயர்க்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

இறுதியாக,

- இந்த உலகத்தில் உள்ள எல்லாரையும் விட தேவன் உங்களை நேசிக்கிறாரென்பதை நம்புகிறீர்களா?

- தேவன் உங்கள் தேவைகள் அனைத்தையும் சந்திக்க வல்லவரென நம்புகிறீர்களா? அது அவரால் கூடுமா?

- தேவன் எல்லோரையும் விட ஞானமுள்ளவரென்பதை நீங்கள் நம்புகிறீர்களா?

- தேவன் உங்கள் எதிர்காலத்தை அறிந்திருக்கிறாரென நீங்கள் நம்புகிறீர்களா?

மேலே உள்ள அனைத்திற்கும் உங்கள் பதில் ஆம் என்றால், தேவனையும் அவருடைய வாக்குறுதிகளையும் நம்பாதபடி எது உங்களைத் தடுக்கிறது?

ஜெபம்

“பிதாவே, நான் உங்கள் கட்டளைகளை மீறியிருக்கிறேனென அறிந்திருக்கிறேன். என் பாவங்கள் என்னை உம்மிடமிருந்து பிரித்தது. நான் பாவியாயிருப்பதனால் மனம் வருந்துகிறேன். நான் உண்மையில் என் வாழ்க்கையில் செய்த அனைத்திற்காகவும் வருந்துவதோடு, என் பாவ வாழ்க்கையிலிருந்து உம்மிடம் திரும்ப வேண்டுமென விரும்புகிறேன். தயவுசெய்து என்னை மன்னியும். என் வாழ்க்கையின் பாவத்தை மேற்கொள்ள எனக்கு உதவிசெய்யும். நான் உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்து என் பாவங்களுக்காக மரித்தாரென்றும் மீண்டும் உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவிக்கிறார்; என் ஜெபத்தைக் கேட்கிறாரென விசுவாசிக்கிறேன். இயேசுவை என் வாழ்க்கையின் தேவனாக வரும்படி அழைக்கிறேன். உமக்கு கீழ்ப்படிவதற்கும், உமது விருப்பத்தை என் வாழ்க்கையில் செய்வதற்கும் உமது பரிசுத்த ஆவியானவரைத் தாரும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

மேலதிக வாசிப்புக்காக
*கிரியையில்லாத விசுவாசம் செத்தது:* யாக்கோபு 2:14,20,26, மத்தேயு 7:21,23, தீத்து 1:16, லூக்கா 6:46, 1 கொரிந்தியர் 13:2, யோவான் 2:23,25, 8:30,31, 12:42,43

*கிரியையில்லாத விசுவாசம் போலியானது:* யாக்கோபு 2:18, 2 தீமோத்தேயு 3:5, 1கொரிந்தியர் 13:3, மத்தேயு 5:20, 23: 23,28, ரோமர் 3:20, கலாத்தியர் 2:16, 3:10,11, தீத்து 3:4,5, எபேசியர் 2:8,10